# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PE/COP/POLI/Circular
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 25.05.2015


பொது தொழில் முயற்சி சுற்றுநிருப இல. PED 2/2015


பொது தொழில் முயற்சிகள்
திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு-01


அமைச்சுக்களின் செயலாளர்கள்,
வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும்
அரச உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச உடமைக் கம்பனிகளின் அலுவலர்களுக்கு தொலைத் தொடர்பு வசதிகளை வழங்குதல்**

வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச உடமைக் கம்பனிகளின் அலுவலர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் நியதிச்சட்ட பணிகளை வினைத்திறனுடனும் பயன்வலுமிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதனைக் கருத்திற் கொண்டு தற்பொழுது காணப்படும் தொலைத் தொடர்பு வசதிகளுக்கான செலவின வரையறையினை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. தகைமையுடைய அலுவலர்களின் அனைத்து தொடர்பாடல் சிட்டைகளும் (உத்தியோகபூர்வ மற்றும் வதிவிட தொலைபேசி, தொலைநகல், தனிப்பட்ட கையடக்க தொலைபேசி மற்றும் இணையத்தளம்) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மாதமொன்றுக்கான ஆகக்கூடிய வரையறை வரைக்கும் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | வசதி | மாதத்திற்கு ஆகக்கூடிய வரையறை (வாடகை, வரிகள் உள்ளடங்களாக) ரூபா |
|---|---|---|
| 1 | தலைவர் / தகைமையுடைய அதிகாரி | 13,000,00 |
| 2 | பிரதான நிறைவேற்று அலுவர் / முகாமைத்துவப் பணிப்பாளர் / நிறைவேற்றுப் பணிப்பாளர் / தொழிற்பாட்டு பணிப்பாளர் | 10,000,00 |
| 3 | பிரதான நிதி அலுவர் / பிரதான தொழிற்பாட்டு அலுவர் / உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் அதே தரத்திலுள்ளஏனைய அலுவர்கள் | 9,000,00 |
| 4 | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பதவிநிலை அலுவலர்கள் | 5,000,00 |

03. குறித்த மாதமொன்றின் ஏதேனும் சேமிப்புகள் அதே நிதி வருடத்தில் அடுத்துவரும் மாதங்களுக்கு முன்கொண்டு செல்லப்படமுடியும். அவ்வாறான சேமிப்புகள் அடுத்த நிதி வருடத்திற்கு அவ்வாறு முன்கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

04. வதிவிட தொலைபேசிகள், தனிப்பட்ட கையடக்க தொலைபேசிகள் அல்லது இணையத்தள வசதிகளினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்வதற்கான செலவினை குறித்த அலுவலர் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும். அத்தகைய உபகரணங்களுக்கான செலவினங்கள் குறித்த தொழில் முயற்சியினால் மீளளிக்கப்படமாட்டாது.

05. அலுவலா் ஒருவா் ஒரு மாதத்திற்கு அதிக காலப்பகுதி கொடுப்பனவுடன் அல்லது கொடுப்பனவற்ற விடுமுறையில் இருப்பாராயின், வதிவிட மற்றும் கையடக் தொலைபேசி / இணையத்தள வசதிகளுக்காக செலவினம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. எவ்வாறாயினும், அலுவலா் ஒருவா் ஒரு மாதத்திற்கு அதிக காலப்பகுதி கொடுப்பனவுடன் அல்லது கொடுப்பனவற்ற விடுமுறையில் இருந்தும், அவரது கடமையுடன் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டுவருவாராயின் பணிப்பாளர் சபையானது, சந்தர்ப்பத்தினைப் பொறுத்து வதிவிட கையடக்க தொலைபேசி மற்றும் இணைத்தள வசதிகளுக்கான தொடர்பாடல் சிட்டைக் கொடுப்பனவை மீளளிப்புச் செய்வதற்குத் தீர்மானிக்க முடியும்.

06. இந்த சுற்றுநிருபமானது 2015 ஜுன் 01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறுதல் வேண்டும். 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது தொழில் முயற்சி சுற்றுநிருபத்தின் கீழ் வெளியிடப்பட் "நல்லாட்சிக்கான பொது தொழில் முயற்சி வழிகாட்டகல் கைந்நூல்" இன் 8.3.4 ஆம் வாசகம் இத்தால் நீக்கப்பட்டுள்ளது.

07. இச்சுற்றுநிருபம் தொடர்பாக ஏதேனும் தெளிவுகள் தேவைப்படுமாயின் பொது தொழில் முயற்சிகள் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் நாயகம் திரு ஜே.எம்.யு.பீ. ஜயமஹா (தொ.பே.இல. 2484623) அல்லது பணிப்பாளர் திரு எம்.ஆர்.சீ.ஆர் மீபுர (தொ.பே.இல.2484628) ஆகியோரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**ஒப்பம் / ஆர்.எச்.எஸ் சமரதுங்க**
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :
1. சனாதிபதியின் செயலாளர்
2. செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபை உள்ளூராட்சி, சனநாயக ஆட்சி அமைச்சு
3. கணக்காய்வாளர் நாயகம்